# சட்டப் பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலுரை... 10 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஈடில்லா தங்க முதலீட்டு திட்டம் தந்து பெருமை தந்தார்; உயர்நிலை ஆலோசனைக் குழு உருவாக்கம் தந்து பெருமை தந்தார்; ஊரெல்லாம் மகாசிவராத்திரி, நவராத்திரி பெருமை தந்தார்; எல்லா நாளும் அன்னைத் தமிழில் வழிபாடு என்ற பெருமை தந்தார்; ஏறி இறங்க பக்தர்களுக்கு கம்பி வட ஊர்தி/மின் தூக்கி பெருமை தந்தார்; ஐயப்பனுக்கு மலர்வழிபாடு மங்கலத்தில் பெருமை தந்தார்; ஒரு கால பூசை கோயில் மின்கட்ட ணத்திற்கு மைய நிதி பெருமை தந்தார்; ஓலைச்சுவடி நூலாக்கம் பெருமை தந்தார்; ஔவையார் சிறப்புக்கு மணிமண்டபம் பெருமை தந்தார்; எஃகு போல் உறுதியாய் திருத்தேர் கொட்டகைகள் பெருமை தந்தார்; மாற்றுத் திறனாளிகள் விரைவு தரிசனம் செய்வதற்குண்டான பெருமை தந்தார்; அருளாளர்கள் சித்தர்களுக்கு பெருவிழா பெருமை தந்தார்; திருக்கோயில் பக்தர்களுக்கு மருத்துவ மையம் பெருமை தந்தார்; மங்கையருக்கு பௌர்ணமி திருவிளக்குப் பூஜை பெருமை தந்தார்; பசுக்கள் காப்பகம் திருப்பணி பெருமை தந்தார்; குளுகுளுவென்று யானை நீர் விளையாட யானைக் குளியல் பெருமை தந்தார்; திருக்கோயில்களில் நூலகம் பெருமை தந்தார்; அலுவலர்களுக்கு 108 வாகனங்கள் பெருமை தந்தார்; 1,100 இணைகளுக்கு திருக்கோயில் சார்பில் திருமணம் பெருமை தந்தார்; அனைத்து சாதியினருக்கும் அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி பெருமை தந்தார்; திருவள்ளுவர் திருக்கோயில் திருப்பணி பெருமை தந்தார்; இவை இந்து சமய அறநிலையத்துறைக்கு முதல்வர் தந்த பெருமையிலும் பெருமை.

இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட பணி 5 ஆயிரத்து 114 கோடி என்று குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆண்டு தமிழக முதல்வர் அவர்கள், ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற உத்தரவிட்டிருக்கின்ற பணிகள் எவ்வளவு என்றால், 1,114 திருக்கோயில்களில், சுமார் ரூ.970 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார். இந்தப் பணிகள் 108 அறிவிப்புகளாக ஒன்றாக்கி, அந்த 108 அறிவிப்புகளில், 32 அறிவிப்புகளை 20 அறிவிப்புகளாக இணைத்து, மீதமுள்ள 76 அறிவிப்புகளை இம்மாமன்றத்தில் வாசித்ததாகக் கருதி பதிவு செய்யுமாறு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்

ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 17,000 திருக்கோயில்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த, நிதி இரண்டு இலட்சம் ரூபாய். அந்த இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து, ரூபாய் ஐம்பதாயிரத்தை உயர்த்தி, எப்படி ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், கிராமப்புற கோயில்களுக்கு வழங்கினாரோ, அதைப்போல் ஒருகால பூசைத் திட்டத்தின் கீழ் செயல்படுகின்ற திருக்கோயில்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து இரண்டரை இலட்சம் ரூபாயாக உயர்த்திக் காட்டியிருக்கின்றார் இன்றைக்கு நம்முடைய முதல்வர் அவர்கள். இந்த இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு அரசுக்கு தேவைப்படுகின்ற, அரசு வழங்குகின்ற தொகை எவ்வளவு என்றால், 85 கோடி ரூபாயினை அரசு மானியமாக இந்தத் திருக்கோயிலுடைய வைப்பு நிதிக்கு வழங்குகின்றது. இந்த 17,000 திருக்கோயில்கள் என்பது, தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றபோது 13,000 திருக்கோயில்களாக இருந்தன. முதல் ஆண்டு 2,000 திருக்கோயில்களை உயர்த்தினார்; இரண்டாவது ஆண்டு கூடுதலாக 2,000 திருக்கோயில்களை உயர்த்தினார்; தற்போது இந்த ஆண்டு கூடுதலாக 1,000 திருக்கோயில்களை எண்ணிக்கையில் சேர்த்துக்கொண்டு, அதற்குண்டான 25 கோடி ரூபாயயையும் இன்றைக்கு அரசே மானியமாக வழங்குகிறது என்பதை நான் பதிவு செய்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், அந்தத் திருக்கோயில்களில் பணிபுரிகின்ற அர்ச்சகர்களுக்கு ரூ.1,000/- என்பதை, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் தொடங்கப்பட்டது. அந்த வகையிலே புதிதாக எடுத்துக்கொள்ளப்படுகின்ற 1,000 திருக்கோயில்களுக்கும், கூடுதலாக அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் மாதந்தோறும் வழங்குகிறோம். இதற்குண்டான செலவு ஆண்டுக்கு 21 கோடி ரூபாய் என்பதை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

### ஒருகால பூசைத் திட்டம்

ஒருகால பூசைத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் 17,000 திருக்கோயில்களின் வைப்புத் தொகை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2.50 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இவ்வாண்டு 1,000 நிதி வசதியற்ற திருக்கோயில்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இதற்கான மொத்த செலவினம் ரூ.110 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

ஏற்கெனவே, 17,000 திருக்கோயில் அர்ச்சகர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உதவித் தொகை ரூ.1000/- இவ்வாண்டு கூடுதலாக சேர்க்கப்படும் 1000 திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கும் வழங்கப்படும்.

### கல்வி உதவித் தொகை!

ஒருகால பூசைத் திட்டத்தில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளை களுக்கு ஏற்கெனவே 400 பேர்களுக்கு ரூ.10,000/- கல்வி ஊக்கத் தொகை வழங்கியதை இந்த ஆண்டு 500 பேர்களுக்கு உயர்த்தி வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் நலன் கருதி, இவ்வாண்டு 500 மாணவர்களுக்கு மேற்படிப்பிற்காக தலா ரூ.10,000/- கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இந்த ஆண்டு 6 திருக்கோயில்களில் பக்தர்களுக்கான ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஏதுவாக பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, ரூ.177.70 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்ற அந்த 6 திருக்கோயில்ள்.

(1) சிவகங்கை மாவட்டம், தாயமங்கலம், முத்துமாரியம்மன் திருக்கோயில்.

(2) நீலகிரி மாவட்டம், காந்தல், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.

(3) தேனி மாவட்டம், வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயில்.

(4) சென்னை, வியாசர்பாடி, கரபாத்திர சுவாமிகள் மடாலயம்.

(5) பழநி பழனியாண்டவர் திருக்கோயில் 2 ஆம் கட்டமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

(6) கோவை மாவட்டம், மருதமலை, சுப்ரமணியசுவாமி திருக்கோயில் 3-வது கட்டமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.

407 திருக்கோயில்களில் சுமார் ரூ.150 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். (இணைப்பு-5)

திண்டுக்கல் மாவட்டம், பழநி வட்டம் மற்றும் நகர், பழனியாண்டவர் திருக்கோயிலில் பக்தர்களுக்கான ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஏதுவாக பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு இருப்பதால் பக்தர்களின் நலன் கருதி, இளைப்பாறும் நிழல் மண்டபங்கள், வணிக வளாகம், வாகன நிறுத்துமிடம், நீர் சுத்திகரிப்பு நிலையம், முதலுதவி சிகிச்சை மையம், பொருள்கள் வைப்பறை மற்றும் அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் சுகாதார வளாகங்கள் மேற்கொள்ள ஏதுவாக ரூ.108.90 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக பெருந்திட்ட வரை

மருதமலை சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்கான ஒருங்கிணைந்த அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஏதுவாக பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு ரூ.34.30 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு இருப்பதால் பக்தர்களின் வசதிக்காக கூடுதலாக தங்கும் விடுதிகள், பணியாளர் குடியிருப்பு மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ஏதுவாக பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு மூன்றாம் கட்டமாக (Phase-3) ரூ.18.20 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**வள்ளலார் அவதரித்த இல்லம் ரூ.3.75 கோடியில் மறுசீரமைப்பு!**

### நாள் முழுவதும் அன்னதானம்

ஏற்கெனவே, 11 திருக்கோயில்களில் செயல்பட்டு வருகின்ற இந்த அன்னதானம் இந்த ஆண்டு மேலும் இரண்டு கோயில்களுக்கு நீட்டிக்கப்படுகிறது.

(1) மதுரை மாவட்டம், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில்.

(2) கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்.

இந்த இரண்டு திருக்கோயில்கள் இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ளப்படுகிறது. இவ்வரசு பொறுப்பேற்ற இதுவரையில், இந்த ஆண்டு 11 திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதான திட்டம் செயல்படுத்தப்பட போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பக்தர்களுக்கு நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம் தற்போது 11 திருக்கோயில்களில் நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு இத்திட்டம் மதுரை மாவட்டம், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

### பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு உணவு!

திண்டுக்கல் மாவட்டம், பழநியாண்டவர் திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் ஏற்கெனவே காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்திருக்கிறோம். இந்த ஆண்டு முதல் நம்முடைய மாவட்ட அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்களின் கோரிக்கையை ஏற்று திண்டுக்கல் பழநியாண்டவர் திருக்கோயிலின் சார்பில் நடத்தப்படுகின்ற பள்ளி, கல்லூரிகளிலே படிப்பவர்களுக்கு மதிய உணவுத் திட்டமும் இந்த ஆட்சியில் கொண்டுவரப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

திண்டுக்கல் மாவட்டம், பழநி, பழனியாண்டவர் திருக்கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஏற்கனவே காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மதிய உணவும் வழங்கப்படும்.

### நாள் முழுவதும் பிரசாதம்!

நாள் முழுவதும் அன்னப் பிரசாதம் வழங்கும் திட்டம். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் முதன்முதலில் இந்தத் திட்டம் துவக்கப்பட்டது. தற்போது, 20 கோயில்களில் இருக்கிற இந்த அன்னப் பிரசாத திட்டம் கூடுதலாக இந்த ஆண்டு 5 திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும்.

திருக்கோயில்களுக்கு வருகை புரியும் பக்தர்கள் அனைவருக்கும் நாள் முழுவதும் பிரசாதம் தற்போது 20 திருக்கோயில்களில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் இவ்வாண்டு மேலும் 5 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்படும். (இணைப்பு-2)

### நகர்ப்புற திருக்கோயில்கள் திருப்பணி!

சென்னை மாநகர் மற்றும் சென்னை புறநகர்ப் பகுதியிலே இருக்கின்ற 115 திருக்கோயில்களுக்கு ரூ.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடத்தப்படும். அதேபோல், இந்த ஆண்டு புதிதாக தங்கத்தேர் மற்றும் வெள்ளித்தேர் ரூ.9 கோடி மதிப்பீட்டில் 2 தங்கத்தேர்கள் செய்யப்படும்.

1. கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம், லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயில்

2. தென்காசி மாவட்டம், இலஞ்சி இலஞ்சிகுமாரர் திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களுக்கு தங்கத் தேர் இந்த ஆண்டு வழங்கப்படும்.

அதேபோல், இந்த ஆண்டு நான்கு திருக்கோயில்களில் ரூ.11.50 கோடி செலவில் நான்கு புதிய வெள்ளித்தேர்கள் வழங்கப்படவுள்ளன.

1. திருச்சி மாவட்டம், கல்லுக்குழி, ஆஞ்சநேயர் திருக்கோயில்.

2. குமாரவயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.

3. மணப்பாறை, நல்லாண்டவர் திருக்கோயில்.

4. தஞ்சாவூர் மாவட்டம், திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி திருக்கோயில்.

இந்த ஆண்டு, மேற்படி நான்கு திருக்கோயில்களுக்கு வெள்ளித்தேர் உபயதாரர்களால் வழங்கப்படவிருக்கிறது. திருச்சியை சார்ந்தவர்களிடத்தில் எந்தவொரு reaction-ம் காணும். (குறுக்கீடு) இரண்டு அமைச்சர்களிடத்திலும் எந்தவொரு reaction-ம் காணும். (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிக்கு இப்போதுதான் படித்தேன். (குறுக்கீடு) அறிவிப்பு புத்தகத்தில் full ஆக இருக்கிறது பாருங்கள்.

**பேரவைத் தலைவர்:**

Reaction உள்ள கோயில்களுக்கு நீங்கள் ஒன்றும் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள்.

**பி.கே. சேகர்பாபு:**

இந்த ஆண்டு 23 திருக்கோயில்களில் ரூ.15.60 கோடி செலவில் 23 புதிய மரத் தேர்கள், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கேற்ப பணி எடுத்துக்கொள்ளப் படுகிறது.

82. சென்னை மாநகர் மற்றும் சென்னை புறநகரில் அமைந்துள்ள 115 திருக்கோயில்களில் ரூ.50 கோடி மதிப்பீட்டில் திருப்பணி செய்து திருக்குட நன்னீராட்டு விழா நடத்தப்படும். (இணைப்பு-6)

### ஆன்மிகப் பயணம் இராமேசுவரம்– காசி ஆன்மிகப் பயணம்

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, ஆன்மிகப் பயணத்தில் ஒரு மைல் கல்லை பதித்திருக்கிறோம். முதன் முதலில் ஒன்றிய அரசு அறிவிக்காததற்கு முன்பே காசி-இராமேஸ்வரத்திற்கு ஆன்மிகப் பயணம் அறிவித்த ஆட்சி தமிழக முதலமைச்சர் அவர்களுடைய ஆன்மிக ஆட்சி என்பதை இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில், 60 வயதிற்கு மேற்பட்ட மூத்தவர்களுக்கு இந்த ஆண்டு 420 பேர் கட்டணம் இல்லாமல் இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு செல்வதற்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்திருக்கின்றார்கள். இதற்கு ஆகின்ற 1 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவை அரசே மானியமாக வழங்கும்.

ஆன்மிகப் பயணமாக இராமேசுவரம் இராமநாதசுவாமி திருக்கோயிலி லிருந்து காசி விசுவநாதசுவாமி திருக்கோயிலுக்கு வயது மூப்பின் காரணமாகவும், பொருளாதார வசதியின்மை காரணமாகவும், இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட 500 பக்தர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அழைத்து செல்லப்பட்டனர். அதிகப்படியான பக்தர்கள் இந்த பயணத்தை மேற்கொள்ள விருப்பம் தெரிவிப்பதால், இவ்வாண்டு 420 பக்தர்கள் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.1.05 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

அதேபோல், 60 வயது மூப்புடை யவர்களுக்கு ஒரே நேரத்தில் முருகனின் அறுபடை வீடுகளான பழனி, திருச்செந்தூர், சுவாமிமலை, அழகர்கோவில், திருத்தணி, திருப்பரங்குன்றம் ஆகிய திருக்கோவில்களுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொள்வதற்கு கடந்த ஆண்டு 1,000 பேர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கினார்கள். இந்த ஆண்டும் தமிழ்க் கடவுளான முருகர் திருக்கோயிலுக்கு 1,000 பேர்கள் ஆன்மீகப் பயணமாக அழைத்துச் செல்வதற்கு அதற்குண்டான நிதி ரூபாய் ஒரு கோடியே 58 இலட்சத்தை அரசே மானியமாக வழங்குகின்றது.

தமிழ்க் கடவுளான முருகப் பெருமானின் அறுபடை வீடுகளுக்கு, வயது மூப்பின் காரணமாகவும், பொருளாதார வசதியின்மை காரணமாகவும், இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட 1000 பக்தர்களை ஆன்மிகப் பயணமாக அரசு நிதியில் அழைத்து செல்லும் திட்டம் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது பக்தர்களின் ஆர்வத்தை கருத்தில் கொண்டு, இவ்வாண்டு மேலும் 1000 பக்தர்கள் அறுபடை வீடுகளுக்கு ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர். இதற்கான செலவினத்தொகை ரூ.1.58 கோடி அரசு நிதியாக வழங்கப்படும்.

இதைத் தொடர்ந்து விரத நாட்களான ஆடி மாதம், புரட்டாசி மாதம் ஏற்கெனவே நம்முடைய சுற்றுலாப் போக்குவரத்தின் சார்பில் நம்முடைய ஆன்மீகப் பயணம் மேற்கொள்கிறார்கள். இந்த முறை தமிழக முதல்வர் அவர்கள் கட்டணம் இல்லாமல் 60 வயதுக்கு மேல் மூப்பு உள்ளவர்களுக்கு ஆன்மீகப் பயணமாக ஆடிமாதத்தில் அம்மன் திருக்கோவில்களுக்கு ஆயிரம் பேரையும், அதேபோல், வைணவத் திருக்கோவில்களுக்கு 60 முதல் 70 வயது வரையுள்ள ஆயிரம் பக்தர்கள் கட்டணமின்றி அழைத்துச் செல்வதற்கு ரூபாய் 50 இலட்சத்தை அரசு நிதியாக தமிழக முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்.

### விரத மாதங்களில் ஆன்மீகப் பயணம்!

ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் பிரசித்தி பெற்ற வைணவத் திருக்கோயில்களுக்கும் வயது மூப்பின் காரணமாகவும், பொருளாதார வசதியின்மை காரணமாகவும், இறை தரிசனம் கிடைக்க இயலாத 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்ட, தலா 1000 பக்தர்கள் அழைத்து செல்லப்படுவர். இதற்கான செலவினத் தொகை ரூ.50 இலட்சம் அரசு நிதியாக வழங்கப்படும்.

ஆன்மீக நூல்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ஏற்கெனவே 216 ஆன்மீக நிலையங்களை மீண்டும் பதிப்பாக்கத்தின் மூலம் புத்துயிர் அளித்திருக்கின்றார். இந்த ஆண்டு கூடுதலாக 300 ஆன்மீக நூல்கள் புதுப்பாக்கப்படும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நிதி வசதியற்ற திருக்கோயில்களில் குறைந்த மாத ஊதியம் பெற்றுவரும் இசைக் கலைஞர்களுக்கு மாதம் ரூ.10 ஆயிரம் தொகுப்பூதியம்!**

### புத்தகங்கள் வெளியிடுதல்

இந்து சமய அறநிலையத்துறை சார்பாக நடத்தப்படும் பதிப்பகப்பிரிவின் மூலம் சமயம் சார்ந்த தொன்மையான மற்றும் அரிய 300 ஆன்மிக நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்படும்.

புத்தக விற்பனை நிலையங்களில் பணிபுரிய முன்னுரிமை. திருக்கோவிலில் புதிதாக இந்த ஆண்டு 100 புத்தக விற்பனை நிலையங்கள் தொடங்கவிருக்கின்றோம். இந்த 100 புத்தக விற்பனை நிலையங்களில் பணியாற்றுவதற்கு மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### புத்தக விற்பனை நிலையங்களில் பணிபுரிய முன்னுரிமை

திருக்கோயில்களில் புதியதாக தொடங்கப்பட உள்ள 100 புத்தக விற்பனை நிலையங்களில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்குத் தொகுப்பூதிய பணிநியமனத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி வட்டம் மருதூரில் அருட்பிரகாச வள்ளலார் அவர்கள் அவதரித்த இல்லம் ரூபாய் 3 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். இந்த நிதி தமிழக அரசினுடைய நிதி என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

### வள்ளலார் அவதரித்த இல்லம் மறுசீரமைத்தல்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், மருதூர், திருஅருட்பிரகாச வள்ளலார் அவதரித்த இல்லம் ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் அரசு நிதியில் மறுசீரமைக்கப்படும்.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு கட்டணமில்லா திருமணத்தை இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் தொடங்கி வைத்தார். முதலாண்டு 500 திருமணங்கள் 20,000 ரூபாய் ஒதுக்கீடு தந்தார். இரண்டாம் ஆண்டு 600 திருமணங்கள் சுமார் ரூபாய் 50,000-த்தை ஒதுக்கீடு செய்து தந்தார். இந்த ஆண்டு 700 திருமணங்களை நடத்த உத்தரவிட்டு, அந்த 700 திருமணங்களுக்கு ஒரு திருமணத்திற்கு 60,000 ரூபாய் என்று ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்றார் நம்முடைய முதல்வர் அவர்கள். இது ஒரு சிறப்பு அந்தஸ்த்து ஆக மாற்றுத்திறனாளிகள் யாராவது ஒருவர், அந்த ஜோடியில் இருக்குமானால் அவர்களுக்கு இந்துசமய அறநிலையத் துறையின் சார்பிலே இருக்கின்ற திருக்கோயில் திருமண மண்டபங்களில் கட்டணம் இல்லாமல் திருமணங்கள் நடத்தி வைக்கப்படும்.

திருக்கோயில்களில் நடைபெறும் திருமணங்களில் மணமக்களில் ஒருவர் மாற்றுத்திறனாளியாக இருப்பின் கட்டணம் ஏதுமின்றியும் திருக்கோயில் மண்டபங்களில் வாடகையின்றியும் திருமணங்கள் நடத்திட அனுமதிக்கப்பட்டு வருகிறது. மேலும் மணமக்களுக்கு புத்தாடைகளும், 4 கிராம் தங்கத் தாலியும் திருக்கோயில் சார்பாக வழங்கப்படுகிறது. இவ்வாண்டு இத்திட்டத்தினை விரிவுபடுத்தி மணமக்களுக்கு 4 கிராம் தங்கத் தாலி உட்பட ரூ.60,000/- மதிப்பில் சீர் வரிசைகள் வழங்கப்படும்.

இந்த ஆட்சி என்பது தொன்றுதொட்டு தொன்மையாக இருக்கின்ற, அனைத்து ஆலயங்களுக்கும் சிறப்பு சேர்க்கின்ற ஒரு ஆட்சி என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. தமிழகத்தில் இருக்கின்ற 22 வழிபாட்டு மடங்களில் ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டு திருப்பணிகள் வழிபாட்டு மடங்களில் மேற்கொள்ளப்படும்.

### வழிபாட்டு மடங்கள்!

22 வழிபாட்டு மடங்களில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். (இணைப்பு-8)

அதேபோல், இசைக் கலைஞர்களுக்கு ஊதிய உயர்வு அறிவிப்பு எண் 31. நிதி வசதியற்ற திருக்கோவில்களில் ஏற்கெனவே, மிகக்குறைந்த சம்பளத்தில் ஆயிரம், இரண்டாயிரம், மூன்றாயிரம் என்று சம்பளத்திலே இருக்கின்ற இசைக் கலைஞர்களுக்கு தொகுப்பூதியமாக மாதம் ரூபாய் 10,000 வழங்கப்படும்.

### இசைக் கலைஞர்களுக்கு ஊதிய உயர்வு!

நிதிவசதியற்ற திருக்கோயில்களில் ஏற்கனவே மிகக் குறைந்த மாத ஊதியம் பெற்று வரும் இசைக்கலைஞர்களுக்கு ரூ.10,000/- தொகுப்பூதியம் வழங்கப்படும்.

ஒளி வருடல் செய்தல். திருக்கோவிலினுடைய அனைத்து document-களும் பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷங்கள் என்பதைக் கருத்தில்கொண்டு, இதுவரையில் இந்துசமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்திலே இருக்கின்ற பல்வேறு document-கள் சுமார் 2 கோடியே 25 இலட்சம் ஒளி வருடல் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு கூடுதலாக ஒரு கோடிப் பக்கங்கள் துறையினுடைய அனைத்து document-களும் ஒலி வருடல் செய்யப்படும்.

### ஒளிவருடல் செய்து ஆவணங்களைப் பாதுகாத்தல்

ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் உள்ள கோப்புகளில் 2.25 கோடி பக்கங்கள் ஒளிவருடல் (Scanning) செய்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது திருக்கோயில்களின் ஆவணங்களை பாதுகாக்கும் நோக்குடன் முதற்கட்டமாக முக்கிய மானதிருக்கோயில்களின் ஆவணங்களில் சுமார் 1 கோடி பக்கங்கள் ஒளிவருடல் செய்து ஆவணப்படுத்தப்படும்.

ரோவர் கருவி கொள்முதல் திருக்கோவிலுக்குச் சொந்தமான இடங்களை அளவீடு செய்து, திருக்கோவிலினுடைய சொத்துக்கள் என்பதை நிலைநாட்டுவதற்காக ரோவர் கருவி புதிதாக இந்த ஆண்டு 42 கோடி 50 இலட்சம் செலவில் வாங்கப்பட உள்ளது.

### நிலங்கள் அளவீடு!

திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை பாதுகாக்கும் பொருட்டு, நிலங்கள் அளவீடு செய்யும் பணி மற்றும் எல்லைக் கற்கள் நடும் பணிகளின் முக்கியத்துவம் கருதியும் நவீன தொழில்நுட்ப 40 ரோவர் அளவைக் கருவிகள் (DGPS) ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

### கருணை இல்லங்கள் மேம்பாடு!

ஏற்கெனவே திருக்கோயில்களின் சார்பில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய 7 கருணை இல்லங்கள் இந்த ஆண்டு ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். ஏற்கெனவே, செயல்பட்டு, செயல்பாடு இல்லாத 3 கருணை இல்லங்கள் இந்த ஆண்டு புதுப்பிக்க ப்பட்டு மாணவர் சேர்க்கை நடைபெறும்.

### பக்தர்கள் தங்கும் விடுதி!

அறிவிப்பு எண் 96-97. திண்டுக்கல் மாவட்டம், பழநி, தண்டாயுதபாணி கோயிலுக்கும் மற்றும் திருவண்ணாமலை, அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலுக்கும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டப்படும். அமைச்சர் சக்கரபாணி அண்ணன் மாவட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மலைக்கோயில் சார்ந்த கோயில்களுக்கு அதிகமான பக்கர்கள் வருகை தருவதால், முதலமைச்சர் அவர்கள் 17 மருத்துவ மையங்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு கூடுதலாக பெரியபாளையம் பவானியம்மன் கோயிலிலும், குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோயிலுக்கும் இரண்டு மருத்துவ மையங்கள் இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நான் அறிவித்த இந்த 108 அறிவிப்புகள், கடந்த ஆண்டு அறிவித்த 235 அறிவிப்புகள், அதற்கு முன்பு அறிவித்த 165 அறிவிப்புகள் அத்துணையும் செயல்பாட்டில் இருக்கின்றன. இந்தப் பணிகளெல்லாம் நிறைவுறுகின்ற போது, தமிழக முதல்வர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இந்தப் பணிகள், ஏற்கெனவே வரலாற்றில் சொல்லப்படுகின்ற, இராசராசசோழன், இராசேந்திரசோழன் வரிசையில் எங்களின் முதல்வரின் திருப்பெயரும் இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**ரூ.15.60 கோடியில் 23 திருக்கோயில்களில் புதிய திருத் தேர்கள்!**

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையை தமிழக முதல்வர் அவர்கள் தன் இதயத்தில் வைத்திருக்கின்றார்கள் என்பதற்கு ஒருசில சாட்சிகள். இதுவரையில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் பக்கமே, துறை ஆரம்பிக்கப்பட்ட பிறகு 77 ஆண்டுக் காலத்தில், எந்த முதலமைச்சர்களும் வரவில்லை. நான்கு முறை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை கட்டடத்திற்கு வந்த பெருமை நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களைச் சாரும்.

அதேபோல், இந்த ஆட்சி பொறுப்பேற்றப் பிறகு இருள்சூழ்ந்திருந்த இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டடத்திற்கு 30 கோடி ரூபாயை அள்ளித் தந்து, ஒளிபெறச் செய்தவர் தமிழக முதல்வர் அவர்கள்.

அதேபோல், தமிழக முதல்வர் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பிலே நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்றால், 71 நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்றிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுடன் சேர்த்து, இந்தத் துறைக்கு ரூ.928 கோடியை அரசு மானியமாக வழங்கியிருக்கின்றார். இதுவரையில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் வரலாற்றில் எந்த அரசும் வழங்காத தொகை, இந்தத் தொகை. அதோடு கூடுதலாக சொல்ல வேண்டுமென்றால், தமிழக முதல்வர் அவர்கள், தஞ்சாவூருக்கு ரூ.3 கோடி வழங்கியதாக, சட்டமன்ற உறுப்பினர் துரை. சந்திரசேகரன் அவர்கள் பெருமைப்பட்டுக்கொண்டார்.

அதோடுமட்டுமல்ல, கன்னியாகுமரி திருக்கோயிலின் சார்பில், 480 திருக்கோயில்கள் அந்த தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருக்கோயில்கள். அந்தத் திருக்கோயில்களுக்கு இதுவரையில், முதலமைச்சர் அவர்கள், கிட்டத்தட்ட ரூபாய் ஒரு கோடியாக இருந்த நிதியை ரூபாய் 8 கோடியாக உயர்த்திக்காட்டியுள்ளார்கள்.

அதேபோல், புதுக்கோட்டை தேவஸ்தானத்தின்கீழ் 225 திருகோயில்கள் வருகின்றன. அந்தத் திருக்கோயில்க ளுக்கு ஒரு கோடியாக இருந்த நிதியை இன்றைக்கு ரூபாய் 6 கோடியாக உயர்த்தித் தந்திருக்கின்றார். இப்படி உயர்த்தப்பட்ட நிதி திருக்கோயில்களுக்குமாத்திரம் எத்தனை என்றால், 803 திருக்கோயில்களுக்கு 64 கோடி ரூபாயை மானியமாக வழங்கி, போதிய விளக்கு எரியாமல் இருந்த திருக்கோயில்கள், போதிய பூஜைகள் இல்லாமல் இருந்த திருக்கோயில்கள், ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்ற சம்பளத்தில் இருந்த பணியாளர்கள், அர்ச்சகர்கள் போன்றவர்களின் அனைத்துத் தேவைகளையும்நிறைவேற்றுகின்றவகையில், ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் இருந்தவர்கள், பத்தாயிரம் ரூபாய் சம்பளம் பெறுகின்ற அளவிற்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய முதல்வர், தமிழக முதல்வர் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆன்மிகம் என்பது அறத்தையும் உள்ளடக்கியது என்றார் நம் முதல்வர். அந்தவகையில், தமிழ்நாடு அரசின் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு 25 பள்ளிக்கூடங்கள் மற்றும் கல்லூரிகள் இருக்கின்றன. இந்த 25 பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் 24 ஆயிரம் மாணவர்கள் படித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

அந்த மாணவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளை நிறைவு செய்ய, 129 பணிகளை ரூபாய் 129 கோடியில் ஒதுக்கி, அந்தப் பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கின்ற பிள்ளைகளுடைய படிப்பிற்கு, கண் திறந்தவர் நம்முடைய முதல்வர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்து சமய அறநிலையத் துறையின் ஏற்றமிகு செயல்பாடுகளைப் பார்த்து எப்போதும் இல்லாத அளவிற்கு அரசு ஒருபுறம் நிதி 928 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்றால், இந்த ஆட்சியில்தான் மூன்று ஆண்டு காலத்தில் உபயதாரர்கள் நிதி 979 கோடி ரூபாய் இந்தத் திருக்கோயிலுக்கு வந்திருக்கிறது. இதில் இருந்து என்ன தெரிகிறது என்றால் இந்த ஆட்சிக்கு தருகின்ற நிதி முறையாக இறை அன்பர்களுக்கு, இறை பக்தர்களுக்கு சேரும் என்பது இந்த நிதியில் இருந்து தெரிகிறது.

இந்திய ஒன்றியத்திலேயே தமிழ்நாட்டில்தான் 72 ஆயிரம் திருக்கோயில்கள் இருக்கின்றது இது அதிகம். காரணம், தமிழ்நாட்டில் நாம் கோயில்களை வைத்து கலை வளர்க்கிறோம்; அதற்கு காரணம் நாம் கோயில்களை வைத்து கலை வளர்க்கிறோம்; கலவரத்தை வளர்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

நாம் கோயிலை வைத்து பண்பாட்டை வளர்க்கிறோம்; பாகுபாட்டை வளர்க்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த மதமாக இருந்தாலும் அன்பு கொள்வதே இந்து மதம்; எந்த மதமாக இருந்தாலும் அன்பு கொள்வதே இந்து மதம். கடவுளை கோயிலில் வைத்து வணங்கலாம், கடவுளை கோயிலில் வைத்து வணங்கலாம், பிரச்சாரத்திற்கு அழைத்து வராதீர்கள். கடவுளை கோயிலில் வைத்து வணங்குங்கள், பிரச்சாரத்திற்கு அழைத்து வராதீர்கள். இறைவனிடம் வரம் கேளுங்கள்; இறைவனை வைத்து வாக்குகள் கேட்காதீர்கள்; இறைவனிடம் வரம் கேளுங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனை வைத்து வாக்குகள் கேட்காதீர்கள்.

உலகிற்கே பொதுமறையும், பொது நீதியும் வழங்கிய அன்னைத் தமிழ்நாட்டில், உலகத்திற்கே பொதுமறையும், பொது நீதியும் வழங்கிய அன்னைத் தமிழ்நாட்டில்; ஆன்மீகத்தை அரசியலாக்கும் சூழ்ச்சிகள் தகர்க்கப்படும். மனித நேயம் ஒருபோதும் இம்மண்ணை விட்டு அகலாது. அறநிலையத் துறையே இருக்காது என்றவர்களின் எந்த அதிகாரமும் தமிழ்நாட்டில் செல்லாது. அறநிலையத் துறையே இருக்காது என்றவர்களின் சொல், தமிழகத்தில் செல்லாது.

நதிகள் முன்னே தான் செல்லும், பின் வந்ததில்லை அதுபோல் எங்கள் முதல்வர் இலட்சியத்தில் முன் வைத்த காலை பின் வைப்பதில்லை. முதல்வர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

முதல்வர் அவர்களுக்கு தோள் கொடுக்க எங்கள் உதயாவும் இருக்கின்றார். இவரால், விளையாட்டுத் துறை வெற்றி மலர்களின் தோட்டமானது களமாடும் இவர்முன்னே சூறாவளிகளும் தோற்றுப்போயின.

### நேற்று நட்சத்திரம்;

நேற்று நட்சத்திரம், நாளை அவர் உச்சத்தில் உலாவரும் உதய சூரியன். (மேசையைத் தட்டும் ஒலி) உதய சூரியன் புறப்பட்டால் உலகமே ஒளிமயமாகும். எங்கள் உதயநிதி புறப்பட்டால் தமிழ்நாடே இன்று போல் என்றும் எங்கள் தலைவர் வசமாகும். அவருக்கும் என் நன்றிகள்.

முதல்வரின் உழைப்பால் உருவான ஆட்சி இந்த ஆட்சி. அவர் இட்ட பணி எதுவாயினும் செய்து முடிப்போம், அவர் எந்த தியாகத்தை ஏற்றுக்கொள்ள சொன்னாலும் அதை முன்னின்று ஏற்போம். அறநிலையத் துறையை அணி செய்து வளர்ப்போம். இதுவே எங்கள் முழக்கம் வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றி.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர் பாபு பேசினார்.